உயர்நிலைப் பள்ளிப் படிப்பைப் பத்தாண்டாக்கி, மேற்கொண்டு இரண்டு வகுப்புகளைக் கல்லூரியில் இணைப்பதா, அல்லது பள்ளியோடு இணைப்பதா, என்பதெல்லாம் ஆராயப்பட வேண்டும்.

சில மாநிலங்களில் கல்லூரியோடு இணைத்திருக்கிறார்கள். சில மாநிலங்களில் ஜூனியர் கல்லூரி என்று தனியாக வைத்திருக்கிறார்கள். எது ஏற்றதாக இருக்கிறது என்று குறித்து சுக்லா குழுவின் பரிந்துரையை அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

பட்டப் படிப்பு மூன்று ஆண்டுகள் இருக்கவேண்டும் என்பதைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டில் வற்புறுத்தியிருக்கிறார்கள். மொத்தம் 15 ஆண்டுகள் இருக்கவேண்டும் என்பதை அகில இந்தியாவிலும் வற்புறுத்த வேண்டும் என்பதுதான் மத்திய அரசு கல்வித் துறையின் கொள்கையாக இருந்துவருகிறது. சில மாநிலங்களில் 14 ஆண்டுகள் என்று இருக்கின்றன. அந்த மாநிலங்களும் அதைப் பதினைந்து ஆண்டுகளாகக் கொண்டுவர வேண்டும் என்றுதான் வற்புறுத்தி வருகிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கோத்தாரி கல்விக் குழு அறிக்கையில் ஆரம்பப் பள்ளிகளை ஒருங்கிணைப்பது குறித்தும், ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவது குறித்தும் ஏதாவது கருத்து தெரிவித்திருக்கிறதா ? அதுபற்றி மாநில அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை.

Tourist Bungalow at Hogenekkal.

*665 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to construct a Rest House at Hogenekkal Project Area : and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஒகேனக்கல்லில் ரூ. 9.50 லட்சம் செலவில் சுற்றுலா மாளிகை ஒன்றைக் கட்டி வருகிறது சுற்றுலா மாளிகை 1974 எப்ரல், மே திங்களில் திறக்கப்படும். இம் மாளிகையில் இருவர் தங்கும் 31 அறைகளும், சுமார் 30 முதல் 40 பேர் தங்கக்கூடிய துயிலிடம் ஒன்றும் இருக்கும்.

1974 மார்ச் 29]

திரு. என். மாணிக்கம் : தலைவர் அவர்களே, ஒகேனக்கல் சுற்றுலா மாளிகைக்குச் செல்லும் வழியில் சின்னாறு என்னும் காட்டாறு இருக்கிறது. அதைக் கடந்து செல்லவேண்டியிருப்பதால் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே, அதற்கு ஒரு மேம்பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒகேனக்கல்லை எளிதில் அடைவதற்கு வகை செய்யும்பொருட்டு ஒகேனக்கல் அருகே சின்னாற்றின் குறுக்கே ஐந்து லட்சத்து அறுபத்தெட்டாயிரம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் பாலமொன்று கட்டுவதற்கு பொது (சுற்றுலா) துறையின் 1973 சனவரித் திங்கள் 24ஆம் நாளிட்ட 253-ஆம் ஆணையில் அரசு ஒப்பளிப்பு வழங்கி உள்ளது. அதை விரைவில் கட்ட முயற்சி எடுக்கப்படும்.

Chola Art Gallery

*666 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that a Chola Art Gallery put up by the Archaeological Survey of India, has been opened in January 1974 at Sri Brahadeeswarar Temple in Thanjavur ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தஞ்சை பெரிய கோயிலின் தெற்கு பிரகாரத்தில் இந்நாட்டவரும் வெளிநாட்டவரும் கண்டுகளிக்கும் வண்ணம் சோழர் காலத்துக் கலைத் திறமையை விளக்கும் ஒரு கலைக்கூடம் இந்திய தொல் பொருள் ஆய்வுத் துறையினரால் நிரந்தரமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கோயிலின் உள் பிரகாரத்தின் சுவர்களில் உள்ள சோழர்களின் விலை மதிக்க முடியாத ஓவியங்களும் பரத நாட்டிய சிற்பங்களும் வண்ணப் புகைப் படங்களாக எடுக்கப்பட்டு பெரிதாக்கப்பட்டு ஒளி வெள்ளத்தில் வைக்கப் பட்டுள்ளன. பெரிய கோயிலில் மற்றும் ஏனைய இடங்களிலுள்ள சோழர்களின் கட்டடக் கலை, சிற்பங்கள் மற்றும் வெண்கலச் சிலைகள் முதலியவற்றை ஒப்பு நோக்குமுகத்தான் அவைகள் பெரிதாக்கப்பட்ட புகைப்படங்களாக எடுக்கப்பட்டு காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

திரு. என். கே. பழனிசாமி : சார், தஞ்சாவூர் சரஸ்வதி மகாலில் பழைய கிரந்தங்கள், சுக்ர நாடி சாஸ்திரம் போன்ற பல சாஸ்திர நூல்கள் இருக்கின்றன. அவற்றை இந்த ஸ்தாபனம் பாதுகாக்கிறதா ? சர்க்கார்........